நாகநாட்யம் – பரிமாணங்கள் (Nākanāṭyam – parimāṇaṅkaḷ)

முனைவர் சி. சாவித்ரி | Dr. Ch. Savithri

உதவிப்பேராசிரியர், இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

savithritamiluniversity@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

இந்தக் கட்டுரையில் எஸ்.செல்லப்பா அவர்களின் தெலுங்கில் எழுதப்பட்ட "நாகநாட்யம்" கவிதைத் தொகுப்பு பல்வேறு பரிமாணங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. எஸ்.செல்லப்பாவின் சுயசரிதை, 8 வகையான கவிதைத் தலைப்புகள், 8 வகையான சித்தாந்தங்கள் கவிதைகளின் கட்டமைப்பில் 8 வகையான மொழி நடை, கவிதையும் கடவுள் கொள்கையும் போன்ற விரிவாக ஆராய

Abstract :

In this article S. Chellappa's collection of poems "Naganatyam" written in Telugu has been studied in various dimensions. S.Chellappa's in detail the structure of 8 types of poetic titles, 8 types of ideologies, and the language style of 8 types of poetry in the structure of poetry, poetry and God's principle.

Keywords:

பரிமாணம் - Dimension, கருத்தியல் - ideology, தொகைச் சொற்கள் - Compound words, ஆழ்ந்த பக்தி - Deep devotion, மனிதநேயம் - Humanity, குறியீடுகள் - Symbols, மனதின் மொழி - Mind Language, உவமைகள் - Parables, மொழி வரபு - Language gain.

நாக நாட்டியம் என்பது ஒரு கவிதைத் தொகுப்பு. இந்நூலை ஆக்கியவர் எஸ். செல்லப்பா ஆவார். இந்நூலில் மொத்தம் 50 கவிதைகள் உள்ளன. இக்கவிதைகளைப் பகுப்பாய்வு செய்து திறனாய்வு நோக்கில் ஆராயப்பட்டுள்ளது.

நூலாசிரியர் குறிப்பு :

இத்தலைப்பின்கீழ் நூலாசிரியர் பெற்றோர், கல்வி, வேலை, இலக்கியக் கொடை, சமுதாய அக்கறை போன்ற தலைப்புகளில் செய்திகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நூலாசிரியர் பெற்றோர் :

எஸ். செல்லப்பா அவர்கள் தமிழ்நாடு, தூத்துக்குடி மாவட்டத்தில் 1952இல் பிப்ரவரி 9 ஆம் தேதி பிறந்தார். இவரின் தந்தை சூசை மாணிக்கம், தாய் தேவநேசம் ஆவர்.

கல்வி :

இவர் பாளையம்கோட்டையில் செயிண்ட் சேவியர் கல்லூரியில் பி.ஏ. ஆங்கிலம் முடித்து, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத் துறையில் எம்.ஏ. பட்டம் பெற்றவர். தெலுங்கானா மாநிலத்தில் உஸ்மானியப் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றவர். ஆந்திரப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர்.

பணி அனுபவம்

தமிழகத்தில் உள்ள மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 1976ல் ஆங்கிலத் துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றிய செல்லப்பா அவர்களுக்கு 1977-ல் இந்திய வருவாய்த்துறை (ரெவின்யூ சர்வீஸ்) பணி கிடைக்கப்பெற்று, 1979ல் இ.ஆ.ப (IAS) அதிகாரியாக ஆந்திர மாநிலத்தில் தேர்வு செய்யப்பெற்றார். 1987 – 90 இடைக்காலத்தில் ஆந்திர மாநிலத்தில் ஸ்ரீகாகுளம், ஹைதராபாத் மாவட்டங்களில் இவர் மாவட்ட ஆட்சியராகப் பணியாற்றியவர். பஞ்சாயத்ராஜ் கமிஷனராகவும், பள்ளிக் கல்வி முதன்மைச் செயலாளராகவும் (School Education Principal Secretary), ஆந்திர மாநில மனித உரிமைகள் ஆணையச் செயலாளராகவும் (Human Rights Secretary in Andhra District) பணியாற்றியவர். மேலும், 2004 – 2005 இடைப்பட்ட காலத்தில் ஹைதராபாத் பப்ளிக் ஸ்கூல் தலைவராகப் (Chairperson) பணியாற்றி, கடப்பா என்ற ஊரில் புதிய ஒரு கிளையை ஆரம்பித்தார். மறைந்த எம்.ஆர்.பாய், எஸ்.காசீபாண்டியன் போன்ற அறிவில் சிறந்தவர்களின் பயிற்சியில் பணியாற்றி, நீதி அரசராகவும், சிறந்த ஆட்சியராகவும் புகழ் பெற்றவர்.

இலக்கியப் பங்களிப்பு

இக்கவிஞர் தமிழ், தெலுங்கு, ஆங்கில மொழிகளில் பல நூல்களும், கட்டுரைகளும் எழுதி இலக்கியத்திற்கு மிகச்சிறந்த பங்களிப்பாற்றியுள்ளார். இவரின் படைப்புகள் கீழ் வருமாறு –

தமிழ் நூல்கள்

- செங்காதல்
- உள்ளக் குமுறல்
- உதிரிப் பூக்கள்
- ஓடைக் கவிதைகள்
- கூட்டிற்கு வெளியே
- மீண்டும் இளவேனில்
- விடையே இல்லாத வினாக்கள்
- புது வெள்ளம்
- இந்திர காவியம் அல்லது நான்மறை விளக்கம் (தமிழக அரசு விருது பெற்றது)
- கூவு கோழியே --- (எழுச்சிக் கவிதைகள்)
- தேன் கிண்ணம்

- கனவில் சிரித்த காட்டுப் பூக்கள்
- நிழற் கனிந்த கனிகள்
- கரிசல் காட்டுக் கவிதைகள்
- பதிநாலாம் இரவு
- புல்லில் தூங்கிய பனி (தன் வரலாறு)

தெலுங்கு நூல்கள்

- நாக நாட்டியம்
- தட்சிணாயனம்

ஆங்கில நூல்கள்

- Tha Cuddapah Roots (Auto biography Part – II)

மொழிபெயர்ப்பு நூல்கள்

- வௌவாலின் பயணம்
- சுட்டும் வழிச் சுடரோ --?

ஆராய்ச்சிக் கட்டுரைகள்

- இறால்மீன் வளர்ப்பு (ஆங்கிலத்தில்)
- மறைக்கப்பட்ட மாமன்னர் வரலாறு (குமுக ஆராய்ச்சிக் கட்டுரை)
- திருவள்ளுவர் கால குமுக வரலாறு

சமுதாய அக்கறை

இவர் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மாணவர்களுக்கு சிறந்த விடுதி வசதியை ஏற்பாடு செய்து தந்துள்ளார். பின்தங்கிய வகுப்பு சார்ந்த கல்லூரி மாணவர்களுக்கு தங்கும் வசதி செய்து தறுவதை தனது தலையாயக் கடமையாக எண்ணியவர். இந்திய உணவுக் கழகத்தில் (Food Corparation of India) மூத்த பிராந்திய மேளாலராக (Senior Regional Manager) பணியாற்றிய காலங்களில் 5 லட்சம் மெட்ரிக் டண்களில் கிடங்கு வசதிகளை இலவசமாக உருவாக்கியவர். பேராசிரியர் பி.சுப்பிரமணியம், எஸ்.காசீபாண்டியன், நீதிபதி ஆவுல சாம்பசிவராவ் இவர்களுடன் கை கோர்த்து சித்தூர் மாநிலம் குப்பத்தில் திராவிட பல்கலைக்கழகம் ஒன்றினை உருவாக்குவதில் எண்ணற்ற முறைகளில் சிறப்பாக பணியாற்றியவர்.

நூலைப் பற்றி

நாகநாட்யம் என்ற இந்நூலில் உள்ள செய்திகளை இரண்டு தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளன. அவை :-

1. நூலின் பெயர் காரணம்
2. நூலின் அமைப்பு

1. நூலின் பெயர்க்காரணம்

'நாகநாட்யம்' என்ற தலைப்பில் உள்ள, இந்நூலில் நாகநாட்யம் என்ற பெயரில் எந்த ஒரு கவிதையும் அமைக்கப்படவில்லை. அப்படி என்றால், இந்த நூலின் தலைப்பிற்கும் உள்ளே உள்ள கவிதைகளுக்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா? என ஆராய்ந்து பார்த்தேன். தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இக்கவிதைத் தொகுப்பிற்கு ஏன் நாகநாட்யம் என்று பெயரை வைத்திருக்கிறார் என்று கவிஞர் செல்லப்பா அவர்கள் நூல் முகவுரையில் எடுத்துரைத்ததாவது -

"நாகத்தை நாட்டியம் ஆடச்செய்கின்ற 'மகுடி' பாரத கிராமிய மக்களுக்குப் புதியதொன்றும் இல்லை. இச்சிறு கருவியின் இசையால் கண்கள், காதுகள் மட்டுமே அல்லாமல் இதயத்திற்கும் இதமளிக்கிறது. இதில் பயம், பதட்டம், விழிப்புணர்வு அனைத்தும் உள்ளன. இவையெல்லாம் சங்கீத இசையில் ஒன்றிணைகிறது. இவ்விசை நாகங்களை நாட்டியமாடச் செய்வது மட்டுமின்றி 'மனித இதயங்களையும் நெகிழச்செய்கிறது. நாகநாட்டியம் புதிய அழகை உருவாக்குகிறது. அத்தோடு இவ்வழகு இசையோடு கலந்து படைப்பாற்றலுக்கும் வழிவகுக்கிறது. இந்தப் பாடல் கவிதைத் தொகுப்பிற்கு 'நாகநாட்யம்' என்று ஏன் பெயர் சூட்டினேன் என்றால் கருணையே வடிவமான இறைவனை தியானம் செய்து, அனைத்தையும் அந்த பரமாத்மாவிற்கே சமர்ப்பனம் செய்து அவருள்ளேயே இரண்டறக் கலக்கக் கூடிய ஆழமான ஆன்மீகச் சிந்தனையைத் தூண்டச் செய்தது" என்று கூறுகிறார். பெரும்பாலான கவிஞர்கள் நூல் பெயருக்குக் காரணத்தைச் சொல்வதில்லை. ஆனால் இக்கவிஞர் இக்கவிதைத் தொகுப்பிற்கு 'நாகநட்யம்' என பெயரிடுவதற்கான காரணத்தையும் வாசகர் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே இதனைத் தானே கூற முற்பட்டுள்ளார்.

நூலின் அமைப்பு

ஐம்பது கவிதைகளைக் கொண்ட இந்நூலில் உள்ள தரவுகளைக் கொண்டு அவற்றை மூன்று தலைப்புகளாக ஆராயப்பட்டன. அவை :-

1. கவிதைத் தலைப்புகளின் அமைப்பு
2. கவிதைகளின் கருத்தியல் அமைப்பு
3. கவிதைகளின் மொழிநடை அமைப்பு

இவற்றுக்கான உட்தலைப்புகளை கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம் –

வ.எண்	கவிதைத் தலைப்புகளின் அமைப்பு	கவிதை - கருத்தியல்கள் அமைப்பு	கவிதை மொழிநடை அமைப்பு
1	எதுகை மோனை	அன்பு	மொழி வரவு
2	அடுக்குத் தொடர்	ஆழ்ந்த பக்தி	இயற்கை வருணனைகள்
3	விளக்க முறை	மனித நேயம்	உவமைகள்

4	ஒரு சொல்	மதம்	சொல்லாட்சி
5	இரண்டு சொற்கள்	வாழ்க்கைத் துணை	பிறமொழிச் சொற்கள்
6	மூன்று சொற்கள்	காதல்	குறியீடுகள்
7	கூட்டுச்சொல்	உடலே பிரதானம்	கேள்வியும் நானே பதிலும் நானே
8	பிறமொழிச் சொல்	பரம்பொருளைத் தேடல்	மனதின் மொழி

1. கவிதைத் தலைப்புகளின் அமைப்பு

நாகநாட்யம் எனும் இந்நூலில் உள்ள கவிதைத் தலைப்புகள் 8 வகையான அமைப்புகளில் உள்ளன. அவை கீழ்க்கண்ட பட்டியலில் –

வ. எண்	**எதுகை மோனை**	**அடுக்குத் தொடர்**	**விளக்க முறை**	**ஒரு சொல்**	**இரண்டு சொற்கள்**	**மூன்று சொற்கள்**	**கூட்டுச் சொல்**	**பிற மொழி**
1	சினுகுலாண்டி சிருநவ்வு	சூடகா சூடகா	ரெக்கலுன்ன நிமிஷாலு	ஒலி	பூல வர்ஷம்	ஜீவித ரண ரங்கம்	கவிதாவளி	நா ஃபோட்டோ
2	ரூபூ சூபூ	சூடகலா சூடகலா	நீ சூபு கோஸம்	நாட்டிக	நா ஓட்டமி	சிவ சக்தி தரிசனம்	ப்ரேமாக்நி	அரங்கேற்றம்
3	முத்துல முச்சட்லு		மூகவாடி கோல	ப்ரமித	நிஜ ஸ்வரூபம்	ஜவாபு லேனி ப்ரச்ன	ஜ்ஞானாக்னி	
4	நவம் நவம் சுபம் சுபம்		நவ்வு தோந்தி ஆ செட்டு	கானுக	ப்ரேம காவ்யம்		ருணானுபந்தம்	
5	ஸ்ருதிகா ஸ்ம்ருதிகா		மாமிடி பண்ட்ல கோத		ஆத்ம ராகாலு			
6	மலினமே மஹாபலம்		விடிபோயின முக்க		கவி மனஸ்தத்வம்			
7	கெரட்டால கன்யலு		ப்ரேம கோ முத்து		டிய்யனி பாட்ட			
8	புனாதிலேனி பூரில்லு				மினுகுரு புருகுலு			

9					அத்வைத ப்ரேம			
10					குண்டெஸன்னாயி			
11					வயு ப்ரசாதம்			
12					முத்யால அனுபவம்			
13					ப்ரேம பிந்து			
14					அநந்த வலயம்			
15					வலபு ஸாகு			
16					ப்ரேம தத்வம்			
17					பஸிகட்டி உய்யால			
18					தக்ஷிண வாயுவு			
19					ப்ரேம வைபவம்			
20					முத்துல ஹாரம்			

மொத்தம் : 8 + 2 + 7 + 4 + 20 + 3 + 4 + 2 = 50

மேற்கூறிய பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள ஐம்பது கவிதைத் தலைப்புகளும் பெரும்பாலும் கவிதையிலே பயன்படுத்திய சொற்கள் அல்லது தொடர்களாகவே அமைந்திருப்பதை காணலாம்.

கருத்தியல் அமைப்பு

நாகநாட்யம் நூலில் உள்ள கவிதைகளின் கருத்தியலை ஆராயும் பொருட்டு இந்நூலாசிரியரே முன்னுரைப் பகுதியில் "நாகநாட்யம்" பெயரில் உள்ள இந்தக் கவிதைகள் மானிட ஆன்மா அறியாமையிலிருந்து தெய்வத்தன்மையை நோக்கி பயணிக்கின்றதைப் பற்றித் தெரியப் படுத்துகிறார். ஆன்மா செல்லுகின்ற இந்த ஆன்மீகப் பயணத்தில் தன்னைத்தான் அறிவது, உடன் இருப்பவர்களையும், தெய்வத்தையும், மற்ற உயிரினங்களையும் அறிந்து கொள்வதே முக்கிய நோக்கமாகும் என்றும், **மானிடர் அனைவருக்கும் ஆன்மா ஒன்றுதான்** என்ற சீரடி சாயியின் தொலைதூரச் சிந்தனையை இக்கவிதைகளில் பார்க்கலாம்" (..) என்று கூறுகின்றார். அது மட்டுமல்லாமல், இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய சி.நாராயணரெட்டி, "இந்நூல் காதல் உணர்வுகளின் தொகுப்பு என்றும், கடவுளைத் தன் கவிதைப் பூக்களால் அர்ச்சித்துள்ளார் இக்கவிஞர்" என்று கூறுகின்றார். அதேபோல், பட்னால் சுதாகர் என்பவர் "இவர் கவிதைகளில் ஒரு தலைவன் தலைவிக்காக ஏங்குகின்ற ஏக்கம் இதில் தென்படாது. ஒரு பக்தன் தெய்வத்தைக் காணப் படுகின்ற பாடும், வேதனையும், கவலையும், தவிப்பும், தாகமும் காணப்படுகின்றது" என்று இந்நூலைப் பற்றிய கருத்தினைப் பதிவு செய்துள்ளார். ஆக, மேற்கூறிய மூவரும் ஒரேவிதமான கருத்தினைப் பதிவு செய்திருந்தாலும், இக்கருத்தினை எண் வகையாக பிரித்து இங்கு விளக்க முற்படுகிறேன். மேற்கூறிய பட்டியலில் பகுத்தவாறு கருத்தியல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றாகச் சான்று காட்டி விளக்கப்படுகின்றன.

1. அன்பு

தமிழில் அன்பு, காதல் வெவ்வேறு பொருளைத் தரக்கூடியதாக உள்ளது. ஆனால், தெலுங்கு மொழியில் 'ப்ரேம' என்ற சொல் அன்பு மற்றும் காதல் இரண்டிற்கும் பயன்படுத்தப்படுகிறது. இக்கவிதைத் தொகுப்பில் 'ப்ரேம' என்ற சொல்லில் ஏழு கவிதைகள் உள்ளன. இத்தலைப்புகளில் கூறப்பட்டுள்ள அன்பு இரண்டு வகையாகக் கவிஞர் பார்த்திருக்கிறார். ஒன்று, மனிதன் மீது கடவுள் காட்டுகின்ற அன்பு. மற்றொன்று கடவுள் மனிதன் மீது காட்டுகின்ற அன்பு. இதையே கவிஞர் நாராயணரெட்டி -

"ப்ரேம (அன்பு) என்ற பெயரில் ஏழு தலைப்புகள் உள்ளன. ப்ரேம காவ்யம் (காதல் காவியம்), ப்ரேமாக்னி (காதல் தீ), அத்வைத ப்ரேம (அத்துவைத காதல்), ப்ரேம பிந்து (காதல் துளி), ப்ரேமகோ ஹத்து (அன்பிற்கோர் எல்லை), ப்ரேம தத்வம் (அன்பின் தத்துவம்) என்பனவாகும். இக்கவிதைகள் அனைத்தும் காதலியின் மீதுள்ள காதலை வெளிப்படுத்தும் விதமாக வெளிப்படையாகத் தெரிந்தாலும், அன்பே வடிவமான கடவுளின் மீது கொண்ட பக்தியின் வெளிப்பாடாகவே உள்ளன. இக்கவிதைகள் அனைத்தும் கடவுளின் மீதுள்ள பற்றை வெளிப்படுத்துவது ஆகும்" என்றார். சான்றாக –

ப்ரேமாக்னி (காதல் தீ) என்ற கவிதையில்
ப்ரஹ்மத்வம் லாண்டிதி நீ ப்ரேமாக்னி (பிரம்மத்துவம் போன்றது உன் அன்பு தீ)
நீ ப்ரேம காந்திலோ (உன் காதல் ஒளியில்)

ப்ரகாஸிஸ்தோந்தி ஈ ப்ரபஞ்சம் (பிரகாசிக்கிறது இவ்வுலகம்) ப : 26

கருணைக் கடலான அந்த ஈஸ்வரின் அன்பு, அடர்ந்த இருளில் திக்கு முக்காடிக் கொண்டிருகின்ற மக்களுக்கு ஒளிவிளக்கைக் காட்டிய உணர்வு இக்கவிதை வரிகளில் தென்படுகின்றது என்கிறார் நாரயண ரெட்டி (நாகநாட்யம் - வாழ்த்துரை)

ரெக்கலுன்ன மனிஷி என்ற கவிதையில் ஒரு பக்தன் கடவுளின் மீது வைத்திருகின்ற அன்பின் தவிப்பை வெளிப்படுத்தும் கவிதை வரிகள் –

நீதோ நேதோ நேனுன்னப்புடு (உன்னுடன் நான் இருக்கையில்)
நிமிஷாலகு ரெக்கலு மொலுஸ்தாயி (நிமிடத்திற்கு சிறகுகள் முளைக்கும்)
மாஸாலு கண்ட்டலுகா (மாதங்கள் மணிகளாக)
கண்ட்டலு கனிபிஞ்சனி நிமிஷாலுகா (மணிகள் காணாத நிமிடங்க்ளாக)
கரிகி போதுன்னாயி (கரைந்து போகின்றன)
--
நீவு லேனப்புடொ (நீ இல்லாத பொழுதோ)
மொலிசின ரெக்கலு ஊடிபோதுன்னாயி
(முளைத்த சிறகுகள் உதிர்ந்து போகின்றன)
--
நீ ப்ரேம வெலுதுருகை (உன் அன்பு ஒளிக்காக)
ஆ வெலுதுருலோ கலிஸின வெச்சதனம் கோஸம்
(அந்த ஒளியில் கலந்த கதகதப்புக்காக)
எதுரு சூஸ்துன்னானு யுக யுகாலுகா ---
(காத்துக் கொண்டிருகிறேன் யுக யுக்கங்களாக---)

என்று கடவுளின் அன்பிற்கு ஏங்கும் ஏக்கம் இக்கவிதை வரிகளில் காணமுடிகிறது.

வலபு சாகு (சாகுபடி) என்ற கவிதையில் இறைவன் மீது அன்பு காட்டினாலும் அந்த அன்பை ஏற்றுக்கொள்ள இறைவனுக்கும் அன்பு உள்ளம் இருக்க வேண்டும் அல்லவா? இறைவன் தன்னைப் பார்க்கமாட்டாரா? தன் அன்பை ஏற்கமாட்டாரா என்று ஏங்கிப் பரிதவிக்கும் உள்ளமானது இவ்வாறு புலம்புகிறது –

கொண்ட லோயலோ (மலை பள்ளத்தாக்கில்)
குபுரு பொதல மாகாணி (அடர்த்தியான புதர் நிலம்)

வஸந்தம்லோ குரிஸின வர்ஷானிகி (கோடைக்கால மழையில்)
மஞ்சி வித்தனாலேஸி (நல்ல விதை விதைத்து)

ப்ரேம பண்டிஞ்சடானிகி (அன்பை சாகுபடி செய்ய)
நேலகு கூடா ப்ரேம உண்டாலி கதா!
(நிலத்திற்கும் அன்பு இருக்கனும் அல்லவா!) (ப.38)

ஒருதலைக் காதல் கொண்ட காதலனைப் போல எவ்வளவோ மன்றாடிப் பார்த்தும் கடவுள் கண் திறக்கவில்லையே என்ற ஏக்கம் இந்த கவிதை வரிகளில்தெரிகிறது.

1. ஆழ்ந்த பக்தி

பெரும்பாலான கவிதைகளில், கவிஞர் தனது பக்தி மார்க்கத்தில் சிறிதும் குழப்பமோ தடுமாற்றமோ இன்றி, எத்தகைய இறைவன், இறைவி பெயர்களையோ குறிப்பிடாது பெரும்பாலும் இயற்கையையே பரம்பொருளாகச் சித்தரித்து தனது பக்தியை வெளிப்படுத்தியுள்ளார். தனது பக்தி மார்க்கத்திற்கான ஆன்ம நிலை பயணத்தை இயற்கையின் பால் ஈர்ப்புக் கொண்டு இயற்கையினை ஒட்டியே வழி நடத்திச் செல்கிறார். இயற்கை மற்றும் பிரபஞ்ச சக்தியே, ஆன்மா இறைவனுடன் ஐக்கியமாவதற்கு உறுதுணையாக்கும் என்ற சிந்தனையில் மிகவும் தெளிவாக உள்ளார். இதனை முத்யால அனுபவம் (முத்தான அனுபவம்) என்ற கீழ்க்காணும் கவிதையில் உணரலாம்.

சதவகா சதவகா (படிக்க படிக்க)
சதிவிந்தி சாலதந்னட்லு (படிச்சது போதாதென்று)
அந்துலேனி நீ சௌதர்ய சாகரம்லோ (எல்லையற்ற உன் அழகு கடலிலே)
முனிகி முனிகி தெச்சின முத்யால அனுபவம்
(மூழ்கி மூழ்கி கொண்டுவந்த முத்தான அனுபவம்)
தேகா தேகா (கொண்டுவர கொண்டுவர)
தெச்சின முத்யாலு கொஞ்சமனி (கொண்டுவந்த முத்துக்கள் கொஞ்சமென்று)
தேவல்ஸிந்தி எக்குவனி (கொண்டுவரவேண்டியது அதிகமென்று)
கொணுகுதோந்தி நா குண்டெ (முனுமுனுகிறது என் நெஞ்சம்)
...

1. மனித நேயம்

கவிஞரின் பக்தி மார்க்கத்தில் மனிதநேயத்திற்கு ஓர் சிறப்பான இடம் கொடுத்து ஆன்ம பயணத்தில் பரம்பொருளுடன் இணைய மனிதருக்குத் தேவையான மிக அவசியமான பண்புகளில் ஒன்றான மனிதநேயம் மிகுதியாவதையே அடிப்படைப் பொருளாக இறைவன் எதிர்பார்க்கின்றார் என்பதை மிக மெல்லிய இறை உணர்வுகளோடு, இறைவனே மனிதநேயம் கொண்டு, மனிதநேயம் மிக்க அனைவருக்கும் ஆதரவு அளிக்கின்றார் என்றும், மனிதநேயம் கொண்டவர்களின் உள்ளதில் இறைவன் மனிதநேயம் கொண்டு குடியிருப்பதாகவும், அவரது கவிதைகளில் சித்தரித்துள்ளார். எழு சுரங்களைப் போல் ஏற்ற இறக்கங்களோடு மாறிமாறி, ஏறி இறங்கி பயணிக்கும் பிராணன் நின்றுபோய்விட்டால், எனது நெஞ்சத்தில் குடியிருக்கும் உனது கதி என்னாவது? என்று இறைவனை நோக்கியே வினா எழுப்பி, இறைவனோடு இரண்டறக் கலந்துவிட்ட நிலையை கீழ்க்கண்ட ப்ரமித (அகல் விளக்கு ப: 44) என்ற கவிதை வரிகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

மாவதகு மாரு பேரைன நுவ்வு (மனிதநேயத்தின் மறு பெயரான நீ)
இங்கோ குண்டெனு பாரேஸேந்துகு (இன்னொரு இதயத்தை தொலைத்திட)

எந்துகு முந்துகொச்சாவு? (ஏன் முன் வந்தாய்?)
ஈ குண்டெனி (இந்த இதயத்தை)
நீ ஊபிரி ஸ்வராலகு (உன் சுவாச சுரங்கள்)
ஸரிகமலூதே நா குண்டெனீ வொதிலேஸ்தே
(சரிகம பாடும் என் நெஞ்சைவிட்டு விலகினால்)
நின்னு நுவ்வே போகொட்டுகுன்ன தானிவௌதாவு
(உன்னை நீயே தொலைத்துக் கொண்டவளாவாய்)
எந்துகண்டே... (ஏனென்றால் ...)
ஈ குண்டெலோ வுண்டே வாரெவரோ தெலுஸா?
(இந்நெஞ்சில் இருப்பது யாரென அறிவாயா?)
நுவ்வே ... (நீயேதான் ...)

மதம்

கவிஞரின் பெற்றோர் பெயர்கள் சூசை மாணிக்கம், தேவநேசன் என்று இருப்பதால் இவர் ஒரு கிறித்துவராகத்தான் இருக்கமுடியும். இக்கவிதைத் தொகுப்பில் மதம் சார்ந்த கருத்துக்கள் என்று அராயும்போது மூன்று கவிதைகளில் இந்து மதம் சார்ந்த தெய்வங்களைக் குறிப்பிட்டிருப்பதால் இவர் அனைத்து மதங்களும் ஒன்றே என்ற கொள்கையுடையவாகத் திகழ்கிறார் என்று கூறலாம். இவர் கவிதைகளில் முக்கியமாகக் காணப்படும் கருத்தியல் "ஜீவாத்மாவாகிய நாம் பரமாத்மாவாகிய இறைவனை அடைதல்" என்பதாகும். இந்து தர்மத்தில் மிகவும் போற்றப்படுகின்ற ஒன்று அர்த்தநாரீஸ்வர தத்துவம். அதாவது ஆண் பாதி பெண் பாதி, ஆண் பெண் இருவருமே சமம் என்ற கோட்பாட்டினை இயற்கையில் உள்ள அனைத்துப் பொருள்களிலும் காணலாம் என்றும், அவற்றை பிரிக்கமுடியாது என்பதை சிவ சக்தி தரிசனம் (ப : 32) என்ற கவிதையின் வாயிலாக உணர்த்துகிறார் கவிஞர். அக்கவிதை –

ப்ரேம ஸ்வரூபமே சிவமைதே (அன்பி வடிவம் சிவமானால்)
சிவ ப்ரதர்ஸனம் நுவ்வேகா ! (சிவ பிரதர்சனம் நீ தானே)
மங்கள் வீணா சிவமைதே (மங்கள வீணை சிவமானால்)
மதுர ராகாலு நுவ்வேகா ! (இனிய ராகங்கள் நீதானே)
சுந்தர புஷ்பம் சிம்மைதே ! (அழகு மலர் சிவமானால்)
சுகந்த பரிமளம் நுவ்வேகா ! (மலரின் நறுமணம் நீதானே)
பச்சிக பயள்ளு சிவமைதே ! (புல்வெளி தோட்டம் சிவமானால்)
பச்சதனம் நுவ்வேகா ! (பசுமை நிறமும் நீதானே)
நீலி கடலி சிவமைதே (நீல நிறக்கடல் சிவமானால்)
நிண்டு தரங்காலு நுவ்வேகா! (நீந்தும் அலைகள் நீதானே)
காவ்ய நேத்ராலு சிவமைதே (காப்பிய கண்கள் சிவமானால்)
கள்ள காந்துலு நுவ்வேகா ! (கண்களில் ஒளியும் நீதானே!)

மேற்கூறிய வரிகள் மகாகவி காளிதாசனின் –

வாகர்தாவிவ ஸம்ருத்தெள
வாகர்த ப்ரதிபத்தயே

ஜகதக பிதரௌ
வந்தே பார்வதீ பரமேஸ்வரௌ !

என்ற பாடல் வரிகளை நினைவு கூறுகிறது.

மற்றொரு சான்று, கவிதாவளி (ப : 16) என்ற கவிதையில் -

குருக்ஷேத்ர யுத்தம்லோ (குருக்ஷேத்திர யுத்தத்தில்)
முத்துல க்ருஷ்ணுடு முக தர்சனம்லோ (அழகு கண்ணன் முக தரிசனத்தில்)

இதில் முத்துல கிருஷ்ணுடு என்று வைணவக் கடவுளின் பெயரையும் குறிப்பிட்டு இருப்பதால் இக்கவிஞர் இந்து மதங்களான சைவம் மற்றும் வைணவ மதங்களையும் ஆதரித்தார் என்பது தெளிவாகிறது.

மேலும், இந்நூலின் முன்னுரைப் பகுதியில் "எல்லா மனிதரின் ஆன்மா ஒன்றுதான்" என்ற சீரடி சாயியின் தொலைநோக்கு பார்வை, இக்கவிதைகளில் காணலாம் என்று கவிஞர் செல்லப்பா அவர்கள் கூறியுள்ளதால், இவர் இந்து மதத்தை ஆதரிக்கிறார் எனலாம். அது மட்டுமல்லாமல், கடவுளை தேடும்பொழுது 'நா ஜீவித ஹஜ்லோ தெலுஸுகுன்னதி (என் வாழ்க்கை ஹஜ்ஜில் அறிந்துக்கொண்டது) என்ற இந்த கவிதை வரியில் ஹஜ் என்ற சொல் முஸ்லீம்களின் புனிதத்தலமான ஹஜ் என்ற திவ்விய தேசத்தை குறிப்பிட்டிருப்பதால், இவர் முஸ்லீம் மதத்தையும் ஆதரிக்கிறார் என்றுதான் கொள்ளவேண்டும்.

வாழ்க்கைத் துணை

நாகநாட்யம் கவிதைத் தொகுப்பில் வாழ்க்கைத் துணையைப் போற்றுகின்ற கவிதைகளும் உண்டு. கவிஞர் தன் வாழ்வில் தன்னை நல்வழிப்படுத்தி, தன் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் கொடுத்த இறைவனையே தன் வாழ்க்கைத் துணையாக பாவித்து, அதற்கான நன்றியினை கீழ்க்காணும் கவிதை வரிகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

பதுகு பாட்டலோ நாதோ (வாழ்க்கை பாதையில் என்னுடன்)
பாதிகேள்ளு நடசின நா பங்காரு தீக..
(பல ஆண்டுகள் பயணித்த என் பொற்கொடியே..)

ஆகலி படி (பசியுற்று)
ஆத்மபாத படிநப்புடல்லா (ஆன்மா வேதனைப் படும்போதெல்லாம்)
ப்ரேம ஹஸ்தாலதோ (அன்பு கரங்களினால்)
ப்ரஸாதிஞ்சாவு நாகு அன்னம் (அமுதை எனக்கு வழங்கினாய்)

என்னி ஜன்மலு எத்தினா (எத்தனை பிறவிகள் எடுத்தாலும்)
எலா தீருஸ்தானு ஈ ருணானுபந்தம்? (எப்படித்தான் தீர்ப்பேனோ இக்கடனை?)

இக்கவிதை வரிகளில் வாழ்க்கைத் துணையைப் பிரிந்த தவிப்பு தெரிகிறது. கடவுள் கண்முன் தோன்றி மறைந்த காட்சியை கவிஞர் முன்வைத்துள்ளார். கடவுளின் அன்பு உணர்வை வெளிப்படுத்த மற்றொரு சிறந்த கவிதை 'கானுக' (காணிக்கை) ப : 48 இதில் கடவுள் தன் மீது காட்டுகின்ற அன்பிற்கு மாறாக அவருக்கு எதையாவது காணிக்கையாக தரவேண்டும் என்று எண்ணுகின்ற பக்தன் 'வாத்ஸல்யமூர்திவைன நீ ப்ரேமகேதி மூல்யம்? (பாசமே உருவான உன் அன்பிற்கு ஏது விலை?) என்று கேள்வி எழுப்பி, உலகத்தில் உண்மையான பாசத்திற்கு விலை சொல்ல முடியாது என்பதை மிக நுட்பமாக கடவுளின் வழி நின்று 'அன்பை' சிறப்பிக்கிறார்.

காதல்

நாகநாட்டியம் என்ற இக்கவிதைத் தொகுப்பில் கவிஞர் கடவுளைக் காதலியாகவும் தன்னைக் காதலனாகவும் எண்ணிக் காதல் மொழிகள் பல குவிந்து கொட்டிக்கிடக்கிறது. இத்தொகுப்பில் உள்ள பல கவிதைகள் காதலன் காதலியிடம் பேசுவது போலவும் அல்லது காதலி காதலனிடம் பேசுவது போலவும்தான் காட்சியளிக்கிறது. அவற்றில் சில –

காதல் வயப்பட்ட கவிஞனின் மன போராட்டம் 'நா ஓட்டமி' (என் தோல்வி) ப : 2 என்ற கவிதை வரிகளில் –

ஆநாடு எந்துகலா தூஸாவு? (அன்றைய தினம் ஏன் அப்படி பார்த்தாய்?)
நிர்மல ஹ்ருதயமுதோ (பதட்டமற்ற நெஞ்சைக் கொண்டு)
நீ எதுட்ட நிலபட்ட நேனு (உன் எதிரில் நின்ற நான்)

நேட்டிதாக ஓட்டமி எருகனி நேனு (நேற்றுவரை தோல்வி அறியாத நான்)
நீ கள்ள சூபுலோ (உன் விழிப் பார்வையில்)
கரிகிபோயானு ! கலவர அட்டானு ! (கரைந்துப் போனேன்! கலவரப்பட்டேன்)
ஏமீ எருகனி நாகு (ஒன்றும் அறியாத எனக்கு)
எந்துகீ சிக்ஷ? பாத? (ஏன் இந்த தண்டனை? வலி?)

ஈ க்ஷணம்லோ (இந்த நொடியில்)
நீ ஸமக்ஷமுலோ (உன் முன்னிலையிலே)
நா ஓட்டமினி (என் தோல்வியை)
ஒப்புகுண்டுன்னானு (ஒப்புக்கொள்கிறேன்)
இகனுஞ்சைனா நன்னலா சூடகு (இனியாவது என்னை அப்படி பார்காதே)

நீ சூபு கோஸம் (உன் பார்வைக்காக) ப: 6, என்ற மற்றொரு கவிதையில் –

என்னோ பனுலுண்டகா (எத்தனையோ பணிகள் இருந்தபோதிலும்)
அன்னீ விடிசி பெட்டி (அத்தனையும் விட்டுவிட்டு)
நீ சிருநவ்வு கொரகை (உன் புன்னகைக்காக)
ஏ திகுலு எரகனி நீ கடகண்டி (எந்த கவலையும் அறியாத உன் கடைக்கண்)

சூபுல கொரகை வச்சானு (பார்வைக்காக வந்தேன்)

என்று காதலியின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கும் காதலனைப் போல, கடவுளின் அன்பு பார்வைக்காக ஏங்கும் உள்ளம் இங்கு தெளிவாகத் தெரிகிறது. இதுபோல காதலியின் முத்தத்தின் மதிப்பு அளவிடமுடியாது என்று கூறிய –

நீ சூடனி சூபுலோ ஒக சூபுந்தி (நீ பார்க்காத பார்வையில் ஓர் பார்வை இருக்கு)
தானி ஸூடிகாலி (அந்த புயல்காற்று)
காலிம்புலோ வுந்தி சல்லதனம் (தேடலில் இருக்கு குளிர்ந்த தன்மை)

ஆகஸ்மத்துகா யிச்சின ஒக முத்தே (எதிர்பாராது தந்த ஓர் முத்தம்)
அம்ருத வர்ஷம் நாகைதே (அமிர்த மழையாம் எனக்கதுவே)
நீ முத்துல ஹாரம் விலுவெந்தோ? (உன் முத்த மாலையின் மதிப்பெனவோ?)

இக்கவிதை வரிகள் கவிஞன் இறைவனைப் பார்த்துதான் இந்த கேள்வி கேட்கிறானா? என்ற சந்தேகம் எழுகிறது. இப்படியும் பக்தி இருக்குமா? இறைவனை இப்படிக்கூட நேசிப்பார்களா? என்றும் தோன்றுகிறது.

உடலே பிரதானம்

அறியாமையில் உழன்று பரம்பொருளை தேடித் தேடி அலையும், பிரபஞ்சத்தின் ஆக்கமாக விளங்கும் மானிடரிடையே தோன்றும் அன்பானது இதயத்தில் தோன்றி, உடல் முழுக்க வியாபித்து உயிர் சுழர்ச்சிக்கு வழி வகுத்து, இறுதியில் மண்ணில் புதைந்து அழுகிப்போகும் உடல்தானே பரம்பொருளை அடையும் பயணத்திற்கான வாகனம். அழுகிப்போகும் மலம் கொண்ட உடலில் பெருகும் அன்புதானே இறையருளின் ஆன்மீக வழி. அதனை அடைவதற்கு அசுத்தமான இத்தேகம் அவசியமே என்பதனை உணர்த்தும் வகையில் கீழ்க்கண்ட கவிதை வரிகளில் தெளிவுபடுத்தியுள்ளார்.

மட்டிலோ கலஸின (மண்ணில் கலந்த)
மானவ ப்ரேமலோ (மனிதனின் அன்பில்)
மலினம் லேகுண்டுந்தா? (அசுத்தம் போகுமா?)
அயினா மலினமே நாகு மஹா பலம் (இருப்பினும் அசுத்தந்தான் எனக்கு மகா பலம்)
மலினமே (அசுத்தந்தான்)
மானவ ப்ரேமகு மூலம் (மானிட அன்பிற்கு மூலம்)

பரம்பொருளைத் தேடல்

கவிஞர் கடவுளை தேடும் பணியில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்போலும். எங்கே கடவுள்? எங்கே கடவுள்? என காடு மேடுகள் எங்கும் அலைந்து திரிந்து, பரம்பொருளை காணக்கிடைக்காமல் இறுதியில், இறைவனை எங்கும் காண இயலாது என்ற முடிவுக்கு வந்ததாக, கீழ்க்காணும் 'ஜவாபு லேனி ப்ரஸ்ன' (பதில் இல்லா கேள்வி) என்ற கவிதை வரிகளில் அமைந்துள்ளார்.

நதி மூலம் கோஸம் வெதுகுதூ (நதி மூலத்தை தேடிக்கொண்டே)
நடிசானு சாலா தூரம் (நடந்தேன் நீண்ட தூரம்)
நடிசி நடிசி (நடந்து நடந்து)
நா ஜீவித ஹஜ்லோ தெலுஸுகொன்னானு
(என் வாழ்க்கை ஹஜ்ஜில் அறிந்து கொண்டேன்)
கோட்டி மூலாலு கல (கோடி மூலங்கள் உள்ள)
ஏட்டிகேதி மூலம்? ஏதி தொலி மூலம்? (நதிகேது மூலம்? எது ஆதி மூலம்?)

ஓ ஜவாபு லேனி ப்ரஸ்ன காபோலு ! (ஒரு பதில் இல்லா கேள்வி போலும்!)

நதி மூலம் ரிஷி மூலம் யாரும் அறிய முடியாது என்பது மூத்தோர் வாக்கு. புராணங்களிலும் சிவனின் அடி, முடியை அறிய முற்பட்ட பிரம்மாவும், விஷ்ணுவும் இறுதியில் தோல்வியுற்றனர். இவர்களைப் போலவே கவிஞர் செல்லப்பா அவர்களும் கடவுளைத் தேடும் பணியில் தோல்வியுற்று, கடவுள் எங்கே இருக்கிறார் என்ற கேள்விக்குப் பதில் இல்லை என்று உணர்ந்து கொண்டார்.

மொழி அமைப்பு

கவிதைகளின் மொழி அமைப்பினை மேற்கூரிய அட்டவணையில் குறிபிட்டவாறு எட்டு தலைப்புகளாக சுட்டப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் -

மொழி வரவு

தெலுங்கு மொழியில் இதுவரை பயன்படுத்தப்படாத மொழி மரபுகள் செல்லப்பா கவிதைகளில் ஆங்காங்கே காணப்படுகின்றன. இந்தப் புதிய மொழிமரபு, இக்கவிதைகளின் வாயிலாக தெலுங்கு மொழிக்கு வரவாக அமைந்துள்ளன என்றால் அது மிகையில்லை.

சான்றாக –

மலர் மழை (பூல வர்ஷம்) என்ற கவிதையில்

வேலு ஸ்பரிசம்தோனே
ஏலுசுன்னாவு நா ஹ்ருதயம் (ப.1)

விரல் ஸ்பரிசத்தைக் கொண்டு என் இதயத்தை ஆட்சி செய்கிறாய் என்று கூறிய கவிஞரின் வரிகளில் விரல் ஸ்பரிசம் என்ற இது போன்ற சொல்லாடல்கள் தெலுங்கு மொழி கவிதைகளில் காணயியலாது. இது போன்றே -

நீ சூடனி சூபுலோ ஒக சூபுந்தி

நீ பார்க்காத பார்வையில் ஓர் பார்வை உண்டு என்ற இது போன்ற தொடர்கள் தெலுங்கு மொழிக்கு வரவு என்றுதான் சொல்லவேண்டும்.

இதுபோன்று பல சொற்தொடர்கள் செல்லப்பா அவர்களின் கவிதைகளில் ஆங்காங்கே காணலாம்.

இயற்கை வர்ணனை

பொதுவாக இயற்கை வர்ணனை என்பது இலக்கியங்களில் நாம் பார்க்கும்போது, இயற்கையை நேரடியாக வர்ணிப்பதும், அல்லது ஒப்புமையாக்கத்தில் வர்ணிப்பதுமாக இருக்கும். ஆனால், நாகநாட்யம் என்ற இக்கவிதைத் தொகுப்பில் பெரும்பாலான கவிதைகளில் பஞ்ச பூதங்களை இயற்கை வர்ணனைக்குப் பயன்படுத்தியுள்ளார். பல இடங்களில் இயற்கையை வர்ணிக்கும் பொருட்டு கவிஞர் புதுவிதமான உத்திகளைக் கையாண்டுள்ளார் என்றே சொல்லவேண்டும். அதாவது, நேரடியாக வர்ணிப்பதோ அல்லது உவமையாகச் சொல்லுவதோ அல்லாமல் இயற்கைப் பொருள்களை அடைமொழியாகவே பயன்படுத்தி இருப்பது இக்கவிதைகளின் ஒரு சிறப்பம்சமாகும். சான்றாக –

அனந்த வலயம் என்ற கவிதையில்,

படமட்டி கொண்ட செட்டுக்கு பண்டின
பொத்து பண்டுனி
ககன சீமலோ கள்ளு விப்பின
நக்ன நக்ஷத்ர கந்யலனி (ப. 42)

மேற்கு மலை மரத்தில் காய்த்த பொழுது பழம் என்றும், விண்ணில் கண்விழித்த நிர்வான தாரகைக் (நக்ன நக்ஷத்திர) கன்னிகள் என்றும் கவிஞர் விந்தையாகவும், வியப்பாகவும் இயற்கை பொருள்களை ஒப்புமைப்படுத்தி காட்டியுள்ளார். **வாயு ப்ரஸாரம்** என்ற கவிதையில் –

செட்லனே சீரகா கட்டுகொன்ன
ஆ சின்னி கொண்டலு (ப.30)

மரங்களையே சேலையாக உடுத்திய அந்தச் சின்ன மலைகள் - மலையை வர்ணிக்கும் போது அம்மலையின் மேல் உள்ள மரங்களைப் பார்த்து, அவற்றைச் சேலையாக மாற்றிக் காட்டிய வர்ணஜால கவிஞன் செல்லப்பன் அவர்கள்.

உவமைகள்

இலக்கியத்திற்கு அழகு சேர்ப்பது எது என்றால் உவமைகள்தான். இந்த உவமை உத்திகளை செல்லப்பா அவர்கள் இருவகையாகக் கையாண்டுள்ளார். ஒன்று சொல் நிலையில் உவமைகளைப் பயன்படுத்துதல், இரண்டு தொடர் நிலையில் உவமைகளைப் பயன்படுத்துதல்.

சொல்நிலைக்குச் சான்று –

ஆகாஸபு பல்லகி நுஞ்சி (ஆகாய பல்லாக்கிலிருந்து) (விடிபோயின முக்க -39)

நா குண்டே தோடலோ (என் இதய தோட்ட்த்தில்) (நிஜ ஸ்வரூபம் - 12)
கொம்மல்லேனி ஆகாஸபு செட்டு மீத (கிளைகளில்லா ஆகாய மரத்தின் மீது)
ஜாருதுன்ன பொத்து பண்டு (சரிந்து விழுகின்ற பொழுது பழம்)

மேற்கூறிய கவிதை வரிகளில் ஆகாயத்தைப் பல்லாக்கோடும் மரத்தோடும், இதயத்தைத் தோட்டத்தோடும், பொழுதைப் பழத்தோடும் சொல்நிலையில் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

தொடர்நிலைக்குச் சான்று -

நாகநாட்யம் என்ற கவிதைத் தொகுப்பில் பல இடங்களில் கவிஞர் அவர்கள் தொடர்களையே ஒப்புமையாகப் பயன்படுத்தியுள்ளார். இந்த உத்தியை கையாண்டு சொல்ல வந்த கருத்தினை மிகவும் ஆழமாக பதிவு செய்துள்ளார் எனலாம். சான்றாக –

அசையாமல் பார்க்கும் பார்வையை, குருக்ஷேத்திர போரில் கண்ணனின் விஸ்வரூபத்தை பார்த்த அர்ஜுனனின் பார்வையோடு ஒப்புமைப்படுத்தி காட்டுகிறார். அவ்வரிகள் –

குருக்ஷேத்ர யுத்தம்லோ
முத்துல க்ருஷ்ணுடு முக தர்சனம்லோ
விஸ்வரூபான்னி சூஸின அர்ஜுனினிலாக
கதலனி நீ கள்ள சூபுலதோ (கவிதாவளி – ப.16)

ப்ரேமாக்னி என்ற கவிதையில் -

கார்தீக மாஸபு மெருபுலா
நீ கண்டி கதலிகலோ
அல்லாடி போதோந்தி நா ஆத்ம
நலிகின நா குண்டே தோடலோ (ப்ரேமாக்னி - ப. 21)

கார்த்திகை மாத மின்னலைப்போல என்று விழி அசைவுகளை மின்னலுக்கு ஒப்புமைப்படுத்தி காட்டியுள்ளார்.

சொல்லாட்சி

நாகநாட்யம் என்ற கவிதைத் தொகுப்பில் மிகவும் சரளமான, எளிதில் புரிந்துக்கொள்ளக்கூடிய சொற்களையே பயன்படுத்தியுள்ளார். ஆகாயம் காற்று, நீர், நெருப்பு, பூமி என்ற பஞ்ச பூதப் பெயர்களை அதிகமாக பயன்படுத்தியுள்ளார். நெஞ்சம் (குண்டெ), ப்ரேம (அன்பு, காதல்), ஆத்ம (ஆன்மா), ப்ரபஞ்சம் (உலகம்), கள்ளு (கண்கள்), சிருநவ்வு (புன்னகை) போன்ற சொற்களை மிகுதியான இடங்களில் பயன்படுத்தியுள்ளார். சான்றாக குண்டே (நெஞ்சு) என்ற சொல்லை மட்டும் 50

கவிதைகளில் 40 இடங்களில் பயன்படுத்தியுள்ளார். அதன் விவரம் கிழ்க்காணும் பட்டியலில் காணலாம்.

வ.எண்	**கவிதைத் தலைப்பு**	**கவிதைத் தொடர்**	**பக்க எண்**
1	நா ஓட்டமி	நா **குண்டெனு** குச்சி குதூஹலிஞ்சாயி	2
2	சூபுகோஸம்	ஒப்புகோலேது நா **குண்டே**	5
3	ரூபூ சூபூ	காதனி அந்தி நா **குண்டே**	6
4	சூடகா சூடகா	நா **குண்டே** ஏறு பொங்குதோந்தி	7
5	முத்துல முச்சட்லு	முரிஸிந்தி நா **குண்டெ**	9
6	நிஜ ஸ்வரூபம்	சிகுரிஞ்சே நா சிட்டி **குண்டெலோ**	12
7	ப்ரேம காவ்யம்	கங்கா காவேரில்லா பொங்கே நா **குண்டே**	13
8	ஆத்ம ராகாலு	நா **குண்டெலோ** என்னடூ உதயிஞ்சலேது	14
9	நவம் நவம் சுபம் சுபம்	நா **குண்டெ** பூமிலோ படி	15
10	அரங்கேற்றம்	நா **குண்டெ** ரக்தம்தோ	17
11	மூகவாடி கோல	எண்டிபோதோந்தி நா **குண்டே**	19
12	நவ்வுதோந்தி ஆ செட்டு	நவ்வலேக ஏடுஸ்தோந்தி நா **குண்டே**	20
13	ப்ரேமாக்னி	நலிகின நா **குண்டெ** தோட்டலோ	21
14	திய்யனி மாட்ட	கள்ளு விப்பிந்தி நா **குண்டே**	22
15	ஓலி	**குண்டெ** கர்பம்லோ மொலசி	25
16	ஜீவித ரணரங்கம்	**குண்டெனு** கோஸி	27
17	அத்வைத ப்ரேம	**குண்டெ** கொட்டிந்தி மேளம்	28
18	குண்டெ சன்னாயி	நித்யமு ம்ரோகே நா **குண்டெ** ஸன்னாயி	29
19	குண்டெ சன்னாயி	**குண்டெ** ஸன்னாயி பாருக முந்தே	29
20	வாயு ப்ரஸாதம்	சின்னகா நலிகின நா **குண்டே**	30

21	ஸ்ருதிகா ஸ்ம்ருதிகா	நா **குண்டே** கோனேட்டிலோ	31
22	ஸ்ருதிகா ஸ்ம்ருதிகா	நா **குண்டெனு** குருக்ஷேத்ரம் சேஸ்தோந்தி	31
23	முத்யால அனுபவம்	கொனுகுதோந்தி நா **குண்டெ**	33
24	ஜவாபு லேனி ப்ரஸ்ன	**குண்டெலோ** புட்டி	34
25	ப்ரேம பிந்து	நா **குண்டெ** தோடலோ	35
26	ப்ரேம பிந்து	ஜீவராசுல **குண்டெலோ**	35
27	ப்ரேமகோ ஹத்து	கொண்டலகன்னா கொப்பதி **குண்டெ**	36
28	ப்ரேமகோ ஹத்து	ம்ரோகுதோந்தி நா **குண்டெ**	36
29	விடிபோயின முக்க	நவயுகம் வெலசிந்தி நா **குண்டெலோ**	39
30	ஜ்ஞானாக்னி	நா சின்ன **குண்டெ**லோந்சி	40
31	ஜ்ஞானாக்னி	**குண்டெ** தோட்டலோ	40
32	ஜ்ஞானாக்னி	விரிகிபோயின நா **குண்டெ** முக்கலனி	40
33	ப்ரமித	இங்கோ **குண்டெனு** பாரேஸேந்துகு	44
34	ப்ரமித	ஈ **குண்டெனு**	44
35	ப்ரமித	ஸரிகமலூதே நா **குண்டெனி** வதிலேஸ்தே	44
36	ப்ரமித	ஈ **குண்டெலோ** உண்ட்டே வாரெவரோ ?	44
37	பஸிகட்டி உய்யால	நீ ப்ரேம முத்துல குண்டெனு	45
38	கெரட்டால கந்யலு	நா **குண்டெ** குடிலோந்சி பரிமலிஞ்சே	46
39	நா ஃபோட்டோ	**குண்டெலோ** நிலிசாவே கோதம்ம	11
40	ரெக்கலுன்ன நிமிஷாலு	**குண்டெலோ** மாத்ரம்	3

பிறமொழிச் சொற்கள்

இக்கவிதைகளில் மிகவும் குறைந்த அளவிலேயே பிறமொழி சொற்கள் கையாளப்பட்டுள்ளன. தெலுங்கு மொழியில் பொதுவாகவே சமஸ்கிருத மொழி சொற்கள் கலந்திருப்பது இயல்பு. அதைதவிர்த்து பிற மொழிச் சொற்கள் என்று பார்க்கும்போது ஃபோட்டோ (11), அரங்கேற்றம் (17), குமரி (18), பொன்னூரு (21), ஹஜ்

(34), மெட்ட (38), ஒரியன் (47) என மொத்தம் ஏழு சொற்கள் மட்டுமே காணப்படுகின்றன.

குறியீடுகள்

இக்கவிதைகளில் வினாக் குறி (?), ஆச்சரியக் குறி (!) என்ற இரண்டு குறியீடுகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், பல இடங்களில் ஆச்சரியக் குறியீடு வரவேண்டிய இடத்தில் வினாக் குறியை இட்டுள்ளார் கவிஞர். ஏன் என்று புரியவில்லை. இக்கவிதைத் தொகுப்பில் 6 கவிதைகளில் ஆச்சரியக் குறியீடு வரவேண்டிய இடத்தில் வினாக் குறியீட்டை இட்ட இடங்கள் -

- ரசிஞ்சி நட்டின்சானு கூடா? (இயற்றி நடிக்கவும் செய்தேன்?) – ப: 4
- ஏ திகுலு எரகனி நீ கடகண்டி சூபுல கொரகை வச்சானு? (எந்த கவலையும் இன்றி உன் கடைக்கண் பார்வைக்காக வந்தேன்?) ப : 5
- ஆபரணம் தரிஞ்சனி அந்தால ஆபரணமா? (ஆபரணம் தரிக்காத அழகு ஆபரணமே?) ப : 6
- உக்கு முலுகுல்லாண்டி ஆ சூபுலதோ இக சூடகலா சூடகலா? (கூர்மையான அப்பார்வையால் பார்க்காதே பார்க்காதே?) ப: 8
- தெச்சின முத்யாலு கொஞ்செமனி (கொண்டுவந்த முத்துக்கள் கொஞ்சமென)
தேவால்ஸிந்தி எக்குவனின் (கொண்டுவரவேண்டியது அதிகமென்று)
கொணுகுதோந்தி நா குண்டெ? (முனுமுனுத்தது என் நெஞ்சம்?) ப :33
- சிவ ப்ரதர்ஸனம் நுவ்வேகா? (சிவ ப்ரதரிசனம் நீதானே?)
மதுர கானாலு நுவ்வேகா ? (மதுரகானங்கள் நீதானே?)
ஸுகந்த பரிமளம் நுவ்வேகா? (நறுமணம் நீதானே?)
பச்சதனம் நுவ்வேகா? (பசுமை நீதானே?)
கள்ளகாந்தி நுவ்வேகா? (கண்களின் ஒளி நீதானே?) ப : 32

கேள்வியும் நானே பதிலும் நானே

நாகநாட்டியம் என்ற இந்த தொகுப்பு நூலில் 3 கவிதைகளில் கவிதையை முடிக்கும் தருவாயில் கவிஞர் கேள்வி ஒன்றினை எழுப்பி அதற்குப் பதிலையும் கூறும் பாணியில் கவிதைகளை அமைத்துள்ளார். இந்த பாணி மற்ற கவிஞர்களிடமிருந்து இவரை வேறுபடுத்திக்காட்டுவதாகத் தெரிகிறது. அவை -

சூபு கோஸம் (பார்வைக்காக) ப: 5 என்ற கவிதையில்

க்ஷணமுலோ முகிஸேதி காதுகா (நொடியிலே முடிவது அல்லவே)
நீ சஹவாஸம்? (உன் சகவாசம்?)
அந்துகே நேனு சூடலேனு (ஆகையால்தான் நான் பார்க்கவில்லை)

ப்ரமித (அகல் விளக்கு) என்ற மற்றொரு கவிதையில் (ப : 44)

ஈ குண்டெலோ வுண்டே வாரெவரோ தெலுஸா?
(இந்த இதயத்தில் இருப்பது யார் தெரியுமா ?)
நுவ்வே (நீ தான்)

கெரட்டால கந்யலு (கன்னி அலைகள்) என்ற கவிதையில் ப : 46,

நீ ப்ரேம உன்னநந்த வரகு (உன் அன்பு உள்ள வரை)
வாடவு ஈ கவிதா புஷ்பாலு (வாடாது இந்த கவிதை பூக்கள்)
எந்துகண்டே (எதனால் என்றால்?)
இவி செக்கனி ஸஜீவ ஸில்பாலு (இவை செதுக்காத உயிர் சிற்பங்கள்)
செரகனி யோக முத்ரலு! (கலையாத யோக முத்திரைகள்)

இதுபோலவே மற்றொரு பாணி, இறுதியில் கேள்வியில் கவிதையை முடிகின்ற பாங்கு. இப்பாணியில் 15 கவிதைகள் உள்ளன. அவை –

1.முத்து முச்சட்லு, 2. முத்துல ஹாரம், 3. ப்ரேம காவ்யம், 4. நவம் நவம் சுபம் சுபம், 5. அரங்கேற்றம், 6. மூகவாடி கோல, 7. டிய்யனி மாட்ட, 8. ஓலி, 9. அத்வைத ப்ரேம, 10. ஸ்ருதிகா ஸ்ம்ருதிகா, 11. ஜவாபு லேனி ப்ரஸ்ன, 12. வலபு ஸாகு, 13. ஜ்ஞானாக்னி, 14.கானுக, 15. ருணானுபந்தம்

சான்று –

வாத்ஸல்யமூர்திவைன நீ ப்ரேமகேதி மூல்யம்?
(பாசமே உருவமான உன் அன்பிற்கு ஏது விலை?) (கானுக ப : 48)
நீ திவ்ய சந்னதிலோ (உன் திவ்விய சந்நிதியில்)
எப்பட்டிகீ நேனொக மூகவாண்ணேனா? (எப்பவும் நான் ஒரு ஊமை தானா?) (மூகவாடி கோல ப : 19)

மனத்தின் மொழி

இந்த கவிதைத் தொகுப்பில் பெரும்பாலான கவிதைகள் மனம் பேசுகின்ற மொழியாகவே அமைந்துள்ளது. ஒரு தனிமனிதன் இறைவன் மீது கொண்ட ஆழ்ந்த பக்தியின் காரணமாகத் தனக்குள்ளேயே உருவாகும் உண்மையான உணர்வுகளின் வெளிப்பாடாகத்தான் உணர முடிகிறது. இந்த உணர்வுகளே அன்பாகவும், காதலாகவும் பரிணமித்திருகிறது எனலாம். அக்கவிதைகளில் சான்றுக்கு ஒன்று மட்டும் –

மூகவாடி கோல (ஊமையின் குமுறல்) ப.19இல்,

நின்னோமாட்ட அடகாலனி (உன்னை ஒன்று கேட்கனும் என்று)
என்னோ ரோஜுலு எதுரு சூஸ்தூ (எத்தனையோ நாட்கள் எதிர்ப்பார்த்து)
நிலபட்டானு நீ எதுட்ட (நின்று விட்டேன் உன் எதிரில்)
நீ சௌந்தர்ய கிரணாலு தகலகானே (உன் அழகு கதிர்கள் பட்டவுடன்)
எண்டிபோதுந்தி நா குண்டெ (ஈரமின்றி போனது என் நெஞ்சம்)
எடாரிகா மாரிபோதுன்னாயி நா பெதவுலு (பாலைவனமாகின என் இதழ்கள்)
எக்கட போயிந்தோ நா மாட்ட? (எங்கே போயிற்று என் பேச்சு?)
நீ திவ்ய சந்னதிலோ (உன் திவ்விய சந்நிதியில்)
எப்பட்டிகீ நேனொக மூகவாண்ணேனா? (என்றும் நானொரு ஊமைதானா?)

கவிதையும் கடவுள்கொள்கையும்

கவிஞர் செல்லப்பா அவர்களின் கவிதைகளை கடவுள்கொள்கை எனும் கோட்பாட்டின்கீழ் ஆராயும் பொருட்டு வைதிகம் அவைதிகம் எனும் நிலையில் இவரின் சில கவிதைகள் அமைந்துள்ளன. வைதிகம் என்பது கடவுள் இருக்கிறார் என்று நம்பும் நிலை, அவைதிகம் அதற்கு மாறானது. இவர் கவிதைகளில் சில இயற்கையே கடவுள் என்று சொல்வதாக அமைந்துள்ளன. சில கவிதைகள் அனைத்தும் சிவமயம் என்ற சிந்தனையை முன்வைத்துள்ளன. சான்று –

சிவசக்தி தரிசனம் என்ற கவிதையில் எல்லாம் சீவமயம் என்ற நிலையில் –

ப்ரேம ஸ்வரூபம் சிவமைதே (அன்பின் வடிவம் சிவமானால்)
சிவ ப்ரதர்ஸனம் நுவ்வேகா (சிவ பிரதர்சனம் நீதானே)
மங்கள வீணா சிவமைதே (மங்கள வீணை சிவமானால்)
மதுர ராகாலு நுவ்வேகா (இனிய ராகங்கள் நீதானே)

இந்தக் கவிதையில் சொல்லப்பட்ட பொருட்கள் **அன்பு, வீணை, மலர், புள்வெளி, நீலக்கடல்** இவை அனைத்துமே சிவம் என்று குறிப்பிடுவதன் வழி கடவுள் அனைத்துமாய் இருக்கின்றான் என்ற வைதிக சிந்தனையுடையவராகக் கவிஞர் தென்படுகின்றார்.

இவரது கவிதைகளை மேலோட்டமாக பார்க்கும்போது பெரும்பாலான கவிதைகள் காதலை மையப்படுத்தியே, காதலின் மெல்லிய உணர்வுகளை பல்வேறு கோணங்களில் சித்தரித்துள்ளதாகத் தோன்றினாலும், அதனை ஆழ்ந்து உள்நோக்கி பார்க்குங்கால் அவ்வுணர்வுகளின் கோலம் காதலையும் தாண்டி இறையன்பு, பக்தி, ஆன்ம இயக்கம், பரம்பொருள் சேர்க்கை, முக்தி மற்றும் ஜீவாத்மா பரமாத்மா ஒன்றோடு ஒன்று ஐக்கியமாகுதல் போன்ற இறைத்தலங்களில் பேரின்ப உணர்வுகளில் பயணிக்கின்றன என்றால் அது மிகையில்லை.

துணைநின்றவை :

- லக்ஷ்மணய்யா சமுத்ரால, (2017), ரகுவம்சம், திருப்பதி: திருமல திருப்பதி தேவஸ்தானம்.
- செல்லப்பா எஸ்., (2009), நாகநாட்டியம், ஹைதராபாத்: ஆஸ் க்ராஃபிக்ஸ்.
- சத்தியராஜ் த., (2018), மீக்கோட்பாடு (தொல்காப்பிய மூலமும் உரைகளும்), கோயம்புத்தூர்: இனம் பதிப்பகம்.